**1. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது ................................ .**

அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்

**விடை:** அ) மயில்

**2. பின்வருவனவற்றுள் ‘மலை’யைக் குறிக்கும் சொல் ......................... .**

அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி

**விடை:** அ) வெற்பு

**3. ‘ஏடெடுத்தேன்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................... .**

அ) ஏடெடு + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்
இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்

**விடை:** இ) ஏடு + எடுத்தேன்

**4. ‘துயின்றிருந்தார்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................... .**

அ) துயின்று + இருந்தார் ஆ) துயில் + இருந்தார்
இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார்

**விடை:** அ) துயின்று + இருந்தார்

**5. என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ......................... .**

அ) என்றுஉரைக்கும் ஆ) என்றிரைக்கும்
இ) என்றரைக்கும் ஈ) என்றுரைக்கும்

**விடை:** ஈ) என்றுரைக்கும்

### பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | கழனி | – | கதிரவன் |
| 2. | நிகர் | – | மேகம் |
| 3. | பரிதி | – | சமம் |
| 4. | முகில் | – | வயல் |

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | கழனி | – | வயல் |
| 2. | நிகர் | – | சமம் |
| 3. | பரிதி | – | கதிரவன் |
| 4. | முகில் | – | மேகம் |

www.surabooks.com


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



## குறுவினா

**1. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?**

வானம், நீரோடை, தாமரை மலர்கள், காடு, வயல், மேகம் முதலியன பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்களாகும்.

**2. தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?**

**தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் :**

வாழ்வில் துன்பங்கள் நீங்கும்.

நெஞ்சில் தூய்மை உண்டாகும்.

வீரம் வரும்.

## சிறுவினா

**'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**

(i) கவிதை எழுத ஏடு ஒன்று எடுத்தேன். வானமும், நீரோடையும், தாமரை மலர்களும் எங்களைக் கவிதையாக இயற்றுக என்றன.

(ii) காடும், வயலும், மேகமும் கண்ணில் புகுந்து கவிதையாய் மாற முயற்சித்தன.

(iii) ஆடும் மயிலுக்கு நிகரான பெண்கள் அன்பினைக் கவிச்சித்திரம் ஆக்கக் கூறினர்.

(iv) குளிர் தென்றலும், ஆடும் மயிலும், அன்னமும், சுடர்விடும் கதிரோனும், வேல் ஏந்திய வீரர்களும் தங்கள் அழகினை எழுதுங்கள் என்றனர்.

(v) இதற்கிடையில் அறியாமையால் துன்பப்படும் தமிழ்நாட்டு மக்களின் காட்சி என்னுள் இரக்கத்தை உண்டாக்கி என் உயிரில் கலந்தது.

(vi) இத்துன்பம் நீங்கிட அனைவரும் இன்பத் தமிழ்க் கற்றவர் என்ற நிலை வர வேண்டும். அந்நிலையிலேயே துன்பம் நீங்கி, நெஞ்சில் தூய்மை உண்டாகி வீரம் வந்து சேரும் என்று இன்பத் தமிழ்க்கல்வி வழியே பாரதிதாசன் கூறுகிறார்.

## சிந்தனை வினா

**தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகள் :**

(i) தமிழ்மொழியில் கல்வி பயிலும் குழந்தைகள் மிகவும் ஆழமாகக் கல்வி கற்பார்கள்.

(ii) மாணவர்களால் தாங்கள் கற்பதைப் பேசுவதுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

(iii) சமூகத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதனால் எளிமையாகக் கற்க இயலும்.

(iv) கற்கும் திறனைப் பெறுவார்கள்.

(v) சுய சிந்தனை வளரும். எளிமையாக உரையாட முடியும்.

(vi) கலந்துரையாடல், விவாதித்தல், பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி இவற்றை எளிதாக எதிர்கொள்வார்கள். தன்னம்பிக்கை வளர்கிறது.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



## கற்பவை கற்றபின்

**1. இயற்கைக்காட்சி குறித்து நான்கு வரிகளில் கவிதை எழுதுக.**

**இயற்கை :**

பூக்களின் வலி மலர்வதால் மறைகிறது
மூங்கிலின் வலி இன்னிசையால் மறைகிறது
மேகத்தின் வலி மழைத்துளியால் மறைகிறது
மனிதனே உன்வலி இயற்கையை நீ போற்றுவதால் மறைந்து விடும் மறவாதே!

**2. 'தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது' என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**மாணவன் -1** : 'தாய்மொழி வழிக்கல்வியே சிறந்தது' என்பது என் கருத்து. முதலில் நாம் ஒன்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். என்னவெனில் தாய்மொழியைக் கற்பது, தாய்மொழி வழி கற்பது ஆகிய இவ்விரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாட்டை அறியாமலேயே வாதிட்டுக் கொண்டுள்ளோம்.

**மாணவன் -2** : என்ன வேறுபாடு? தெளிவாகக் கூறு.

**மாணவன் -1** : தாய்மொழியில் உள்ள இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெறுவது தாய்மொழியைக் கற்றலாகும். தாய்மொழியின் வழியாய் அறிவியல், வரலாறு, புவியியல், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்றுத் தெளிவது தாய்மொழி வழிக் கற்றலாகும்.

**மாணவன் -2** : பிறமொழியில் கற்பதனால் என்ன இழப்பு எனக் கூறு?

**மாணவன் -1** : தாய்மொழியின் வாயிலாகக் கற்பவன்தான் சுயமாகச் சிந்திக்கிறான். சிந்தனை ஆற்றலைப் பெறமுடியும். எண்ணியதை எண்ணியவாறு வெளிப்படுத்த முடியும்.

**மாணவன் -2** : பிறமொழியைக் கற்றவனால் அம்மொழியில் எழுதப்படிக்கத் தெரிந்தபோது, சிந்திக்க முடியாதா?

**மாணவன் -1** : கண்டிப்பாக முடியாது. எடுத்துக்காட்டாக "உனக்குப் பிடித்த ஒன்றைப் பற்றிக் கூறு என்றால் அவன் முதலில் தன் தாய்மொழியில் சிந்தித்து விட்டுப் பிறகுதான் அவன் அறிந்த வேறுமொழியில் பதிலளிப்பான் – தாய்மொழி என்றால் உடனே பதிலளிப்பான். கல்விச் சிந்தனையாளர்களும் இதனையே வலியுறுத்துகின்றனர்.

**மாணவன் -2** : அப்படியென்றால்....

**மாணவன் -1** : என்ன அப்படியென்றால் என்று இழுக்கிறாய்? உண்மையான கல்வியறிவைப் பெற வேண்டுமெனில் தாய்மொழி வழிக் கல்விதான் அவசியம். அவர்களால் மட்டுமே சிறந்த சிந்தனையாளர்களாகவும், படைப்பாளர்களாகவும் கண்டுபிடிப்பாளர்களாகவும் உருவாக முடியும்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



**மாணவன் -2** : நீ சொல்வதும் சரிதான். மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், சர்.சி.வி. இராமன், கணிதமேதை இராமானுஜம் போன்றோர்களும் அவர்கள் தாய்மொழி வழியில் கற்றதனால்தான் பல சாதனைகளை நிகழ்த்த முடிந்தது. இரவீந்தரநாத் தாகூர் அவருடைய தாய்மொழியான வங்க மொழியில்தான் கீதாஞ்சலியை எழுதினார். மகாத்மா காந்தியடிகள் அவருடைய சுயசரிதையைத் தம் தாய்மொழியில்தான் எழுதினார்.

**மாணவன் -1** : சரியாகக் கூறினாய். நான் கூற வந்த செய்தியும் இதுதான். நீயே கூறி விட்டாய். நாமும் நம் தாய்மொழி வழியிலே கல்வி கற்போம். சிறப்புறுவோம்! நன்றி!

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. பரிதி என்பதன் பொருள் ............... . **விடை: கதிரவன்**
2. பாரதிதாசன் எழுதிய ............... என்னும் நாடக நூலுக்குச் சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது. **விடை: பிசிராந்தையார்**
3. அன்பினைக் கவிதையாக எழுதுக என்று கூறியவர்கள் ............... போன்ற பெண்கள். **விடை: ஆடும் மயில்**
4. என்னைக் கவிதையாக எழுதுக என்று கூறியது ............... . **விடை: வானம்**
5. வெற்பு என்பதன் பொருள் ............... . **விடை: மலை**

**பிரித்து எழுதுக**

1. எத்தனிக்கும் = எ + தனிக்கும்
2. பெண்களெல்லாம் = பெண்கள் + எல்லாம்
3. எழுதென்று = எழுது + என்று
4. வெற்பென்று = வெற்பு + என்று
5. இரக்கமுண்டாகி = இரக்கம் + உண்டாகி

**விடையளி :**

1. **பாரதிதாசன் எழுதிய நூல்கள் யாவை?**

(i) பாண்டியன் பரிசு
(ii) அழகின் சிரிப்பு
(iii) இசையமுது
(iv) குடும்ப விளக்கு
(v) கண்ணகி புரட்சிக் காப்பியம்
(vi) இருண்ட வீடு

2. **தமிழ்நாட்டு மக்கள் எவ்வாறு இருந்ததாக பாரதிதாசன் கூறுகிறார்?**

துன்பத்தில் கிடக்கும் என் தமிழ் நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கிடக்கிறார்கள் என்று பாரதிதாசன் கூறுகிறார்.

☆ ☆ ☆



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு - 2

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3 × 1 = 3)

1. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல் ..................... .
   அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி
2. வாழ்வில் உயர கடினமாக ............................. வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க
3. பெயர்ப்பகுபதம் ................. வகைப்படும்.
   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

4. பாரதிதாசன் எழுதிய .............. என்னும் நாடக நூலுக்குச் சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது.
5. .............. சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும்.
6. 'எழுதினான்' என்பது .................. .

## III. பொருத்துக. (4 × ½ = 2)

7. கழனி - கதிரவன்
8. நிகர் - மேகம்
9. பரிதி - சமம்
10. முகில் - வயல்

## IV. சொற்றொடர் அமைத்து எழுதுக (2 × ½ = 1)

11. செல்வம் -
12. இளமைப்பருவம் -

## V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

13. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
14. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
15. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
16. விகாரம் என்பது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். (2 × 3 = 6)

17. 'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.
18. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
19. விகுதி எவற்றைக் காட்டும்?

## VII. அடிமாறாமல் எழுதுக. (4)

20. 'வைப்புழிக்' என தொடங்கும் 'அழியாச் செல்வம்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



இயல் 3

கலை வண்ணம்

# பேசும் ஓவியங்கள்

உரைநடை உலகம்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று ................ .**
அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம்
இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிக்கோல்
விடை: **அ) மண்துகள்**

2. **நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் .......................... .**
அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்
இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்
விடை: **ஈ) கேலிச்சித்திரம்**

3. **'கோட்டோவியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................. .**
அ) கோடு + ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம்
இ) கோட் + டோவியம் ஈ) கோடி + ஓவியம்
விடை: **அ) கோடு + ஓவியம்**

4. **'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................. .**
அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஓடு
இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு
விடை: **இ) செப்பு + ஏடு**

5. **எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................. .**
அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி
இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி
விடை: **ஆ) எழுத்தாணி**

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ................... . விடை: **பாரதியார்**

2. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது ..................... . விடை: **துணி ஓவியம்**

3. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் .................... மீது பொறித்துப் பாதுகாத்தனர். விடை: **செப்பேடுகளின்**

### குறுவினா

1. **ஓவியங்களின் வகைகள் யாவை?**
**ஓவியங்களின் வகைகள் :** குகை ஓவியம், சுவர் ஓவியம், துணி ஓவியம், ஓலைச்சுவடி ஓவியம், செப்பேட்டு ஓவியம், தந்த ஓவியம், கண்ணாடி ஓவியம், தாள் ஓவியம், கருத்துப்பட ஓவியம், நவீன ஓவியம்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



**2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?**

பழங்கால மனிதர்கள் குகைகளில் வாழ்ந்தனர். அவர்கள் செய்திகளைப் பிறருக்குத் தெரிவிக்கவே குகை ஓவியங்களை வரையத் தொடங்கினர்.

**3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?**

கரிக்கோல், நீர்வண்ணம், எண்ணெய் வண்ணம் முதலியனவற்றைக் கொண்டு தாள் ஓவியங்கள் வரையப்படுகின்றன.

**4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.**

அரண்மனைகள், மண்டபங்கள், கோயில்கள் போன்றவற்றின் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் சுவர் ஓவியங்களைக் காணலாம்.

**5. செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?**

(i) நீர்நிலைகள்

(ii) செடி கொடிகள்

(iii) பறவைகள்

(iv) விலங்குகள்

(v) குறியீடுகள்

## சிறுவினா

**1. கேலிச் சித்திரம் என்றால் என்ன?**

(i) அரசியல் கருத்துகளை எளிமையான படங்களைக் கொண்டு விளக்க உருவாக்கப்பட்டதே கருத்துப்பட ஓவியம் ஆகும்.

(ii) கருத்துப்பட ஓவியங்களின் மற்றொரு வடிவமே கேலிச்சித்திரம் எனப்படும்.

(iii) தமிழ்நாட்டில் முதன்முதலாக கருத்துப்படங்களை வெளியிட்டவர் பாரதியார். ஆங்கிலேயர் ஆட்சியின் குறைகளை இந்தியா என்னும் இதழில் கேலிச்சித்திரங்களின் மூலம் வெளியிட்டார். இப்பொழுது பெரும்பாலான இதழ்களில் இவை இடம்பெறுகின்றன.

(iv) மனித உருவங்களை விந்தையான தோற்றங்களில் நகைச்சுவை உணர்வு தோன்றும்படி வரைவதே கேலிச்சித்திரம் ஆகும்.

**2. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.**

(i) ஓலைச்சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாகவும், வண்ணப் பூச்சு ஓவியமாகவும் ஓலைச்சுவடி ஓவியங்கள் வரையப்பட்டன.

(ii) இதிகாசம் மற்றும் புராணக் காட்சிகளாகவே இத்தகைய ஓவியங்கள் இடம் பெற்றிருக்கும்.

(iii) தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் ஓலைச்சுவடி ஓவியங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

(iv) தற்காலத்தில் ஓலைச்சுவடி ஓவியங்களைக் காண்பது அரிது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



## சிந்தனை வினா

**தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?**

கேரளா இயற்கையன்னையின் உறைவிடமாக உள்ளது. தொடர்ச்சியான மலைகள், அழகான நீர்நிலைகள் எனக் கொஞ்சும் இயற்கை அமைப்பு. இதனால் இம்மாநிலத்தில் வனவிலங்குகள் பெருகியுள்ளன. யானைகளும் அதிகமாக இருக்கின்றன. வனத்துறையினரால் யானைகள் பாதுகாக்கப்படுகின்றன. யானைகள் வாழ்வதற்கு ஏற்றச் சூழல் இருப்பதால் அதிக அளவில் யானைகள் இங்கு இருக்கின்றன. அதனால் தந்தத்தால் ஆன ஓவியங்கள் அதிகம் காணப்படுகின்றன.

## கற்பவை கற்றபின்

1. **உமக்குப் பிடித்த காட்சியை வரைந்து வண்ணம் தீட்டுக.**
   மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

2. **பருவ இதழ்களில் வெளிவந்த பலவகை ஓவியங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**
   மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

## கூடுதல் வினாக்கள்

**பிரித்து எழுதுக.**

1. ஓவியக்கலை – ஓவியம் + கலை
2. கோட்டோவியம் – கோடு + ஓவியம்
3. எழுத்தாணி – எழுத்து + ஆணி
4. கேலிச்சித்திரம் – கேலி + சித்திரம்

**எதிர்ச்சொல் தருக.**

1. எளிமை × கடினம்
2. குறை × நிறை

**நிரப்புக.**

1. ......... சுவர் ஓவியங்களை ஏராளமாகக் காண முடியும். விடை: **தஞ்சைப் பெரியகோயிலில்**
2. சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் ............... என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியைச் சீவகன் துணியில் வரைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. விடை: **குணமாலை**
3. ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் .............. . விடை: **இராஜா இரவிவர்மா**


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



4. நாட்டுப்புறப் ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் ………….. . **விடை:** **கொண்டையராஜு**

5. நாட்காட்டி ஓவியங்களைப் ………….. என்றும் அழைப்பர். **விடை:** **பசார் பெயிண்டிங்**

## குறுவினா :

**1. ஓவியம் வரைபவரின் வேறு பெயர்களை எழுதுக.**

கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர்.

**2. ஓவியம் வேறு பெயர்கள் யாவை?**

ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி.

**3. ஓவியக் கூடம் வேறு பெயர்கள் யாவை?**

எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திர மண்டபம், சித்திர சபை.

**4. தந்த ஓவியம் பற்றி எழுதுக.**

வயது முதிர்ந்து இறந்த யானையின் தந்தங்களின்மீது பலவகை நீர் வண்ணங்களைப் பயன்படுத்தி அழகான ஓவியங்களாக வரைவார்கள். தந்த ஓவியர்களைக் கேரள மாநிலத்தில் அதிகமாகக் காணமுடியும்.

**5. கண்ணாடி ஓவியம் பற்றி எழுதுக.**

அழகிய வண்ண ஓவியங்கள் வரைய கண்ணாடிகளைப் பயன்படுத்துகின்றனர். கண்ணாடி ஓவியங்களை உருவாக்கும் ஓவியர்கள் தஞ்சாவூரில் மிகுதியாக உள்ளனர்.

## சிறுவினா :

**1. துணி ஓவியம் / கலம் காரி ஓவியங்கள் என்பது குறித்து எழுதுக.**

(i) துணிகளில் ஓவியங்கள் வரையும் முறை பழங்காலம் முதலே வழக்கத்தில் இருந்துள்ளது. ஓவியம் வரையப் பயன்படும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி படாம், எனப் பல பெயர்களில் அழைப்பர்.

(ii) சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் குணமாலை என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியைச் சீவகன் துணியில் வரைந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

(iii) தற்காலத்தில் கலம்காரி ஓவியங்கள் என்னும் பெயரில் தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஓவியர்கள் வரைந்து வருகின்றனர்.

**2. குறிப்பு வரைக - பசார் பெயிண்டிங்.**

(i) ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் இராஜா இரவிவர்மா. இவரது ஓவியமுறைகள் பிற்காலத்தில் நாட்காட்டிகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டன.

(ii) நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் கொண்டையராஜு.

iii) நாட்காட்டி ஓவியங்களைப் பசார் பெயிண்டிங் என்றும் அழைப்பர்.

☆ ☆ ☆


Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு - 3

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. மிளகாய் வற்றலின் ..................... தும்மலை வரவழைக்கும்.
அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை
2. பொருந்தாத ஓசை உடைய சொல் ...................... .
அ) பாய்கையால் ஆ) மேன்மையால்
இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால்
3. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புவரிடம் .......... இருக்கக் கூடாது.
அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. அன்னை தான் பெற்ற ......................... சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறாா்.
5. 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள் ......................... .
6. நாட்காட்டி ஓவியங்களைப் .............. என்றும் அழைப்பா்.

**III. பொருத்துக** (4 × ½ = 2)

7. கற்கும் முறை – செயல்
8. உயிர்க்குக் கண்கள் – கல்வி
9. விழுச்செல்வம் – பிழையில்லாமல் கற்றல்
10. எண்ணித் துணிக – எண்ணும் எழுத்தும்

**IV. இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.** (2 × ½ = 1)

11. கடல் பார்த்தாள் –
12. புல் தின்றது –

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
14. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
15. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
16. தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
18. சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
19. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

**VII. அடிமாறாமல் எழுதுக.** (4)

20. 'கட்டி' எனத் தொடங்கும் 'கீரைப்பாத்தியும் குதிரையும்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

## இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு-2019-20

பதிவு எண்

### ஏழாம் வகுப்பு

நேரம் : 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 60

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி :**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** (4 × 1 = 4)

1. "உருகெழு வங்கம்" – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ________,
   அ) உணவு ஆ) அழகு
   இ) காற்று ஈ) கப்பல்

2. பின்வருவனவற்றுள் "மலை"யைக் குறிக்கும் சொல் ________,
   அ) காடு ஆ) கழனி
   இ) வெற்பு ஈ) புவி

3. "வனப்பில்லை" என்ற சொல்லை பிரித்து எழுத கிடைப்பது ________,
   அ) வனம் + இல்லை
   ஆ) வனப்பு + இல்லை
   இ) வனப்பு + யில்லை
   ஈ) வனப் + பில்லை

4. பல பொருள் தரும் ஒரு சொல் என்பது ________.
   அ) இயற்சொல் ஆ) திரிசொல்
   இ) திசைச்சொல் ஈ) வடசொல்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக :** (2 × 1 = 2)

5. கல்வியில்லாத நாடு ________ வீடு
6. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது ________.

**இ) பொருத்துக :** (4 × 1 = 4)

7. பரிதி – கல்வி
8. முகில் – மாலுமி
9. மீகாமன் – கதிரவன்
10. விழுச்செல்வம் – மேகம்

**II. எவையேனும் ஐந்தனுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க :** (5 × 2 = 10)

11. பத்துப்பாட்டு நூல்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.
12. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
13. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?
14. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
15. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
16. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?
17. பகாப்பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக :** (3 × 4 = 12)

18. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
19. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
20. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?
21. கல்வியையும், விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?
22. தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



**IV. பின்வரும் கவிதைப் பகுதியை அடிமாறாமல் எழுதுக : (4 × 2 = 6)**

23. "வைப்புழிக் கோட்படா ..............." எனத் தொடங்கும், "அழியாச் செல்வம்" பாடலை, அடிமாறாமல் எழுதுக.

24. "அறிவு" என முடியும் திருக்குறளை எழுதுக.

**V. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க : (10 × 1 = 10)**

25. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக :

மோனிஷா நேற்று வீட்டுக்கு வருவாள்

26. குறிப்பு கொண்டு "மா" என்னும் எழுத்தில் தொடங்கும் சொல்லைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக :

எழுத்துகளை ஒலிக்க ஆகும் கால அளவு

| | | | |
|---|---|---|---|
| | | | |

27. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக : ________ புல் மேயும்.

28. பின்வரும் சொல்லை இருபொருள் தருமாறு தொடர்களில் அமைத்து எழுதுக: மாலை

29. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர் எது?

அ) எழுது ஆ) பாடுதல்
இ) படி ஈ) நடி

30. இணையான தமிழ்ச்சொல் எழுதுக : Brush

31. பாடப்பகுதியிலிருந்து படத்திற்கு பொருத்தமான திருக்குறளை எழுதுக :



32. தமிழ் எண் கொண்டு எழுதுக :

உயிர் எழுத்துகள் ________ உம், மெய்யெழுத்துகள் ________ உம், சேர்த்து முதலெழுத்துகள் ________ ஆகும்.

33. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு ________.

34. பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக :

ஊறு, நடு, விழு, எழு

**VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க: (1 × 6 = 6)**

35. "ஆழ்கடலின் அடியில்" கதையைச் சுருக்கி எழுதுக.

36. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

**VII. ஒரு பக்க அளவில் விரிவாக எழுதுக : (1 × 6 = 6)**

37. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு "எங்கள் ஊர்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை)

☆ ☆ ☆

## விடைகள்

**I.**
1. ஈ) கப்பல்
2. இ) வெற்பு
3. ஆ) வனப்பு + இல்லை
4. ஆ) திரிசொல்
5. விளக்கில்லாத
6. துணி ஓவியம்
7. பரிதி – கதிரவன்
8. முகில் – மேகம்
9. மீகாமன் – மாலுமி
10. விழுச்செல்வம் – கல்வி

www.surabooks.com

www.Padasalai.Net
This is Only for Sample for Full Book Order
Online or Available at All Leading Bookstores
www.CBSEtips.in

# மூன்றாம் பருவம்

www.surabooks.com


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores

நயத்தகு நாகரிகம்

# இயல் 1 விருந்தோம்பல்

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு

**ஆசிரியர்** : **முன்றுறை அரையனார்**

**காலம்** : கி.பி. (பொ.ஆ.) நான்காம் நூற்றாண்டு.

**சமயம்** : பழமொழி நானூறு நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறிய முடிகிறது.

**நூற் குறிப்பு** : பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது நானூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர்பெற்றது. இந்நூலின் ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

## பாடல்

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு –நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல். – **முன்றுறை அரையனார்**

## சொல்லும் பொருளும்

1. மாரி – மழை
2. மடமகள் – இளமகள்
3. வறந்திருந்த – வறண்டிருந்த
4. நல்கினாள் – கொடுத்தாள்
5. புகாவாக – உணவாக
6. முன்றில் – வீட்டின் முன் இடம் (திண்ணை). இங்கு வீட்டைக் குறிக்கிறது.

## பொருளுரை

மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில், பாரி மகளிரான அங்கவை, சங்கவை ஆகியோரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். பாரிமகளிர் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள பழமொழி **ஒன்றுறா முன்றிலோ இல்** என்பதாகும். ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை என்பது இதன் பொருள்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மரம் வளர்த்தால் ............................ பெறலாம்.**

அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி **விடை: ஆ) மாரி**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



2. 'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................... .
அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்
இ) நீர் + உலையில் ஈ) நீரு + இலையில் **விடை: இ) நீர் + உலையில்**

3. மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ......................... .
அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று
இ) மாரியின்று ஈ) மாரியன்று **விடை: அ) மாரியொன்று**

## குறுவினா

1. **பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**
அங்கவை, சங்கவை என்போர் பாரியின் மகள்களாவர்.

2. **'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' - எவ்வாறு?**
பாரி மகளிர் உலை நீரில் பொன் இட்டுத் தந்ததால் 'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' என்பது புலனாகிறது.

## சிந்தனை வினா

**தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.**

**தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகள் : (பண்பாடு- நம்மைப் பண்படுத்துதல்)**

(i) ஒழுக்கம்
(ii) சிறந்த கல்வியைப் பெறுதல்
(iii) பெரியோரை மதித்தல்
(iv) நன்றியுணர்வுடன் இருத்தல்
(v) ஈகைக் குணம்
(vi) விருந்தோம்பல்
(vii) முன்னோர் கூறியவற்றைப் பின்பற்றுதல்
(viii) மேலைநாட்டு உணவைத் தவிர்த்து நம் பாரம்பரிய உணவை உண்ணுதல்.
(ix) உடலை மறைக்கும் ஆடை அணிதல்.
(x) உறவினர்களைப் பேணி பாதுகாத்தல்
(xi) நாட்டுப்பற்றுடனும், மொழிப்பற்றுடனும் இருத்தல்.

## கற்பவை கற்றபின்

1. **வள்ளல்கள் எழுவரின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

| வள்ளல்கள் எழுவரின் பெயர்கள் | |
|---|---|
| 1. அதியமான் | 5. நள்ளி |
| 2. ஆய் | 6. பாரி |
| 3. ஓரி | 7. பேகன் |
| 4. காரி | |


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



**2. விருந்தோம்பல் பண்பை விளக்கும் கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.**

**விருந்தோம்பல் பண்பு – கதை: மாறனார் என்ற சிவனடியார் பற்றிய கதை :**

மாறனார் தம் முயற்சியினாலும் உழைப்பினாலும் உழவுத்தொழில் செய்து அதில் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு சிவனடியார்களுக்கும் நலிந்தவர்களுக்கும் அன்னமிட்டு மகிழ்வார். இவர் இளையான்குடி என்ற ஊரில் வாழ்ந்தவர். தன் மனைவி புனிதவதியுடன் இணைந்து இத்திருத்தொண்டை செய்தார்.

மாறனாரும், புனிதவதியும் சிவனடியார்களுக்குத் தினமும் அன்னமிட்டு அவர்களுக்குப் பாத பூஜை செய்து சிவபெருமானை வழிபட்டு வந்தனர். இவருடைய சிவத்தொண்டை உலகறியச் செய்ய எண்ணினார் சிவபெருமான். தன் திருவிளையாடலால் மாறனாரின் வீட்டில் வறுமை சூழச் செய்தார். ஆனாலும், மாறனார் கடன் வாங்கியும் நிலங்களை விற்றும் அன்னமிட்டார்.

ஒருநாள் கடும் மழை பெய்து கொண்டிருந்தது. மாறனாரும் அவரது மனைவியும் பசியில் வாடிக் கொண்டிருந்தனர். அன்று நள்ளிரவில் சிவபெருமான், அடியவர் கோலத்தில் மாறனார் வீட்டிற்கு வந்தார். அவரைப் பார்த்ததும் இருவரும் அகமகிழ்ந்தனர். ஆனால் அன்னமிடுவதற்கு என்ன செய்வது என்று வருந்தினர். புனிதவதி, மாறனாரிடம், "நாம் இன்று காலையில் வயலில் விதைத்து வந்த விளை நெல்லினைச் சேகரித்து எடுத்து வந்து தந்தால், நான் அதனை சமைத்து அடியவருக்கு அன்னம் பரிமாறுவேன்" என்றாள்.

அடியவரைக் கொஞ்ச நேரம் காத்திருக்கும்படிக் கூறிவிட்டு, வயலுக்குச் சென்றார் மாறனார். புனிதவதி மிச்சமிருந்த விறகை வைத்து தோட்டத்தில் இருந்த கீரையைச் சமைத்தாள். மாறனார் வருகைக்குக் காத்திருந்தாள். அடியவர் கண்ணயர்ந்து விட்டார்.

மாறனார் ஒரு வழியாக நீரில் மிதந்த விதைநெல்லை எடுத்து வந்தார். விறகு இல்லாததால் வீட்டின் கூரையில் இருந்த குச்சிகளை எடுத்துக் கொடுத்தார். புனிதவதி நெல்லை உரலில் இட்டுக் குத்தி அரிசியை எடுத்து உலையிலிட்டுச் சோறாக்கினாள்.

பிறகு உறங்கிக் கொண்டிருந்த அடியவரை உணவு உண்பதற்காக மாறனார் எழுப்பினார். அப்போது சோதி வடிவாக இறைவன் தோன்றினார். "மாறனாரே, உங்கள் இருவரின் விருந்தோம்பல் பண்பினை உலகிற்கு உணர்த்தவே நான் இவ்வாறு செய்தேன். இனி நீங்கள் செல்வங்கள் அனைத்தையும் பெற்று பல காலம் தொண்டு செய்து என்னை வந்து அடைவீர்களாக," என்று கூறிவிட்டு மறைந்தார்.

இப்புராணக்கதை நமக்கு விருந்தோம்பல் பற்றி உணர்த்துகிறது.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார்.
2. முன்றுறை அரையனாரின் காலம் கி.பி. (பொ.ஆ) நான்காம் நூற்றாண்டு.
3. முன்றுறை அரையனார் சமண சமயத்தைச் சேர்ந்தவர்.
4. பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
5. நமது பாடப்பகுதியில் உள்ள பழமொழி நானூறு பாடலில் உள்ள பழமொழி 'ஒன்றுறா முன்றிலோ இல்'
6. கடையெழு வள்ளல்களுள் ஒருவர் பாரி.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



**குறுவினா :**

1. **பழமொழி நானூறு குறிப்பு வரைக.**

   (i) பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

   (ii) இது நானூறு பாடல்களைக் கொண்டது.

   (iii) ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர் பெற்றது.

2. **முன்றுறை அரையனார் - குறிப்பு வரைக.**

   (i) பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார் ஆவார்.

   (ii) இவர் கி.பி. (பொ.ஆ) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்.

   (iii) பழமொழி நானூறு நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறிய முடிகிறது.

☆ ☆ ☆

## இயல் 1 நயத்தகு நாகரிகம்

# வயலும் வாழ்வும்

கவிதைப்பேழை

**நூற்குறிப்பு**

நாட்டுப்புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடும் பாடலே நாட்டுப்புறப்பாடல் எனப்படுகிறது. இதனை வாய்மொழி இலக்கியம் என்றும் வழங்குவர். பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப்பாடல்களை மலை அருவி என்னும் நூலில் கி.வா. ஜகந்நாதன் தொகுத்துள்ளார். அந்நூலில் உள்ள உழவுத்தொழில் பற்றிய பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

**பாடல்**



ஓடை எல்லாம் தாண்டிப்போயி – ஏலேலங்கிடி ஏலேலோ
ஒண்ணரைக்குழி நிலமும் பார்த்து – ஏலேலங்கிடி ஏலேலோ
சீலையெல்லாம் வரிஞ்சுக்கட்டி – ஏலேலங்கிடி ஏலேலோ
சேத்துக்குள்ளே இறங்குறாங்க – ஏலேலங்கிடி ஏலேலோ

நாத்தெல்லாம் பிடுங்கையிலே – ஏலேலங்கிடி ஏலேலோ
நண்டும் சேர்த்துப் பிடிக்கிறாங்க – ஏலேலங்கிடி ஏலேலோ
ஒருசாணுக்கு ஒரு நாற்றுத்தான் – ஏலேலங்கிடி ஏலேலோ
ஓடியோடி நட்டோமையா – ஏலேலங்கிடி ஏலேலோ

மடமடன்னு மடைவழியே – ஏலேலங்கிடி ஏலேலோ
மண்குளிரத் தண்ணீர்பாய – ஏலேலங்கிடி ஏலேலோ
சாலுசாலாத் தாளுவிட்டு – ஏலேலங்கிடி ஏலேலோ
நாலுநாலா வளருதம்மா – ஏலேலங்கிடி ஏலேலோ


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



மணிபோலப் பால்பிடித்து – ஏலேலங்கிடி ஏலேலோ
மனதையெல்லாம் மயக்குதம்மா – ஏலேலங்கிடி ஏலேலோ
அறுப்பறுக்க ஆளுக்கெல்லாம் – ஏலேலங்கிடி ஏலேலோ
ஆளுபணம் கொடுத்துவாரான் – ஏலேலங்கிடி ஏலேலோ



சும்மாடும் தேர்ந்தெடுத்து – ஏலேலங்கிடி ஏலேலோ
சுறுசுறுப்பாய்க் கொண்டு போனார் – ஏலேலங்கிடி ஏலேலோ
கிழக்கத்தி மாடெல்லாம் – ஏலேலங்கிடி ஏலேலோ
கீழே பார்த்து மிதிக்குதையா – ஏலேலங்கிடி ஏலேலோ

கால்படவும் கதிருபூரா – ஏலேலங்கிடி ஏலேலோ
கழலுதையா மணிமணியா – ஏலேலங்கிடி ஏலேலோ

– தொகுப்பாசிரியர் – கி.வா.ஜகந்நாதன்

## சொல்லும் பொருளும்

1. குழி – நில அளவைப்பெயர்
2. சீலை – புடவை
3. சாண் – நீட்டல் அளவைப்பெயர்
4. மடை – வயலுக்கு நீர் வரும் வழி
5. மணி – முற்றிய நெல்
6. கழலுதல் – உதிர்தல்
7. சும்மாடு – பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள்
8. சாலு சாலா – வரிசையாக
9. தாள் – நெற்பயிர்
10. அறுப்பறுக்க – அறுவடை செய்ய

## பொருளுரை

உழவு செய்யும் மக்கள் ஓடையைக் கடந்து சென்று ஒன்றரைக் குழி நிலத்தைத் தேர்ந்தெடுத்தனர். பெண்கள் புடவையை இறுகக் கட்டி நடவு செய்ய வயலில் இறங்கினர். நாற்றுப் பறிக்கும்போது ஆண்களும் பெண்களும் வயல் வரப்பில் உள்ள நண்டுகளையும் பிடித்தனர்.

ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் சுறுசுறுப்பாக நட்டனர். நடவு நட்ட வயலின் மண்குளிருமாறு மடைவழியே நீர்பாய்ச்சினர். நட்ட நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தன. பால் பிடித்து முற்றிய நெல்மணிகள் மனம் மயங்குமாறு விளைந்தன. அறுவடை செய்யும் ஆட்களுக்குப் பணம் கொடுத்தனர். அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டித் தலைக்குச் சும்மாடு வைத்துத் தூக்கிச் சென்று களத்தில் சேர்த்தனர். கதிரடித்த நெல்தாள்களைக் கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்தனர். மாடுகள் மிதித்த நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உழவர் சேற்று வயலில் ........................... நடுவர்.
   அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று **விடை: ஈ) நாற்று**
2. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ........................ செய்வர்.
   அ) அறுவடை ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை
   **விடை: அ) அறுவடை**
3. 'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................... .
   அ) தேர் + எடுத்து ஆ) தேர்ந்து + தெடுத்து
   இ) தேர்ந்தது + அடுத்து ஈ) தேர்ந்து + எடுத்து
   **விடை: ஈ) தேர்ந்து + எடுத்து**
4. 'ஓடை + எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........................... .
   அ) ஓடைஎல்லாம் ஆ) ஓடையெல்லாம்
   இ) ஓட்டையெல்லாம் ஈ) ஓடெல்லாம் **விடை: ஆ) ஓடையெல்லாம்**

### பொருத்துக

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. நாற்று | பறித்தல் | | 1. நாற்று | நடுதல் |
| 2. நீர் | அறுத்தல் | | 3. நீர் | பாய்ச்சுதல் |
| 4. கதிர் | நடுதல் | | 5. கதிர் | அறுத்தல் |
| 6. களை | பாய்ச்சுதல் | | 7. களை | பறித்தல் |

### வயலும் வாழ்வும் பாடலில் உள்ள மோனை, எதுகைச் சொற்களை எழுதுக

| மோனைச் சொற்கள் | எதுகைச் சொற்கள் |
|---|---|
| ஓடை – ஒண்ணரைக் குழி | சேத்து – நாத்து |
| மடமடன்னு – மண்குளிர | சாலு – நாலு |

### பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக

எ.கா. : போயி – போய்

| பேச்சு வழக்கு சொற்கள் | எழுத்து வழக்கு சொற்கள் |
|---|---|
| பிடிக்கிறாங்க | பிடிக்கின்றனர் |
| வளருது | வளர்கின்றது |
| இறங்குறாங்க | இறங்குகின்றனர் |
| வாரான் | வருகின்றான் |


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



## குறுவினா

**1. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?**

(i) உழவர்கள், நாற்றுப் பறிக்கும் பொழுது அங்குள்ள நண்டுகளையும் சேர்த்துப் பிடித்தனர்.

(ii) கதிரடித்த நெல்தாள்களை மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகளைப் பிரித்தெடுத்தனர்.

**2. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?**

(i) அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர்.

(ii) நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து பிரித்தெடுப்பர்.

## சிறுவினா

**உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

**உழவுத்தொழிலின் நிகழ்வுகள் :**

(i) மாடுகளை ஏரில் பூட்டி நிலத்தை உழுது பண்படுத்துவர்.

(ii) நாற்றங்காலில் இருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட நாற்றை நடுவர். அவ்வாறு நடும்போது ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் என்று பெண்கள் நாற்றை நடுவர்.

(iii) பயிருக்குத் தேவையான அளவு நீரைப் பாய்ச்சுவர்.

(iv) பிறகு பயிர்களுக்கு இடையே வளர்ந்துள்ள களைகளைப் பறிப்பர்.

(v) பயிர்களுக்குத் தேவைக்கேற்ப பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளிப்பர். இயற்கை உரங்களையும் பயன்படுத்துவர்.

(vi) நெற்பயிர் வளர்ந்து நெல் முற்றியதும் அறுவடை செய்வர்.

(vii) அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டி நெற்களத்தில் சேர்ப்பர்.

(viii) கதிரடித்து நெல்மணியைப் பிரித்து எடுப்பர். எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர்.

(ix) பிறகு நெல்மணிகளை வெயிலில் காயவைத்து மூட்டைகளாகக் கட்டி வீட்டில் கொண்டு வந்து சேர்ப்பர்.

## சிந்தனை வினா

**உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி எழுதுக.**

**உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் :**

(i) பண்டைத் தமிழர்கள் வேளாண்மைத் தொழிலை மிகச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

(ii) குறிஞ்சி நில மக்கள் ஏர்கொண்டு உழாமல் வேளாண்மை செய்துள்ளனர்.

(iii) முல்லை நில மக்கள்தான் கலப்பையின் உதவியோடு பயிர் செய்துள்ளனர்.

(iv) ஆறு, குளம், ஏரி முதலிய நீர் நிலைகளில் இருந்து உழவர்கள் வயலுக்கு நீர் பாய்ச்சினர். பயிர் செய்தனர். வரகு, சாமை, நெல் எனப் பயிர் செய்தனர் தமிழர். அரிசியை உலகிற்கெல்லாம் கொடுத்தனர்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



(v) அதேபோல பிற பகுதிகளில் இருந்து வேறு சில பயிர்களைத் தமிழகத்திற்குப் பண்டைத் தமிழர்கள் கொண்டு வந்துள்ளனர்.

(vi) வானியல் பற்றி அறிந்ததால் கோள்களின் நிலை கண்டு மழை வரும் காலமறிந்து பயிர் செய்தனர். இயற்கை உரங்களான இலை, தழைகளைப் பயன்படுத்தினர். கால்நடைகளை வளர்த்து அதன் சாணங்களை எருவாக்கினர். கால்நடைகளை வண்டி இழுக்கவும் ஏர் உழவும் பயன்படுத்தினர்.

(vii) இந்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. அதிக விளைச்சல் வேண்டி செயற்கை உரங்களைப் பயன்படுத்தினர். பலவகையான பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தினர். இதனால் மண் வளம் பாதிப்புக்குள்ளாகி விட்டது. மனிதன் செய்த வேலைகளையெல்லாம் தற்பொழுது இயந்திரங்கள் செய்கின்றன.

(viii) உழவுக் கருவிகள், களைப்பறித்தல், அறுவடை செய்தல் என எல்லாவற்றிற்கும் நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. புதிய வகை வேளாண்மையின் விளைவாக மக்களுக்குப் புதிய நோய்கள் வந்தன. சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டது. இந்நிலையை மாற்ற வேண்டி தற்போது இயற்கை வேளாண்மை என்று கூறப்படும் அங்கக வேளாண்மைக்கு மாறியுள்ளனர் விவசாயிகள். இவ்வாறு உழவுத்தொழில் காலந்தோறும் மாற்றமடைந்து கொண்டே வந்துள்ளது.

## கற்பவை கற்றபின்

**வேளாண்மை சார்ந்த கருவிகளின் பெயர்களை எழுதி வருக.**

**வேளாண்மை சார்ந்த கருவிகள் :** ஏர்க்கலப்பை, மண்வெட்டி, அரிவாள், கத்தி, உழவு இயந்திரம், கடப்பாரை.

## கூடுதல் வினாக்கள்

**பிரித்து எழுதுக.**

1. மாடெல்லாம் – மாடு + எல்லாம்
2. அறுப்பறுக்க – அறுப்பு + அறுக்க
3. ஒண்ணரைக்குழி – ஒண்ணரை + குழி
4. வரிஞ்சுக்கட்டி – வரிஞ்சு + கட்டி

**எதிர்ச்சொல் தருக.**

1. சுறுசுறுப்பு × சோம்பல்
2. கீழே × மேலே
3. முற்றியகதிர் × இளங்கதிர்

**நிரப்புக.**

1. நாட்டுப்புறப் பாடல்களை <u>மலை அருவி</u> என்னும் நூலில் கி.வா.ஜகந்நாதன் தொகுத்துள்ளார்.
2. 'குழி' என்பது <u>நில</u> அளவைப் பெயர்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 1

நயத்தகு நாகரிகம்

# திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

விரிவானம்



**ஆசிரியர்** : டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாதர்

**சிறப்பு** : வழக்கறிஞர் தொழில் செய்தவர்; தமிழ் எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் புகழ்பெற்றவர்; இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர். இவர் தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார். இவர் கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுகிறார்.

**பாடப்பகுதி** : இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரை இவரது 'இதய ஒலி' என்னும் நூலில் இருந்து தரப்பட்டுள்ளது.

## மதிப்பீடு

**டி.கே.சி. குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

கவிஞர்கள் தங்கள் கவித்திறத்தால் உலகையே ஆள்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்து திருநெல்வேலியைப் புகழ்பெறச் செய்துள்ளனர். அவர்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கடிகைமுத்துப் புலவர் இரு நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பாடல்கள் பாடியுள்ளார். 'முக்கூடல் பள்ளு' என்னும் சிற்றிலக்கியம் 'சீவலப்பேரி' என்கிற முக்கூடல் பற்றியதாகும்.

மதுரையிலிருந்து நெல்லைக்கு வந்தவர் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர். இவர் நெல்லையில் எழுந்தருளியுள்ள காந்திமதித் தாயைத் தரிசித்து உரிமையுடன் சுவாமியிடம் சிபாரிசு செய்ய வேண்டுகிறார்.

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள சீவைகுண்டத்துப் பெருமாளைப் போற்றிப் பாடியவர் பிள்ளைப் பெருமாள் ஆவார். ஆற்றுக்குத் தென்கரையில் நம்மாழ்வார் பிறந்த ஊரான ஆழ்வார் திருநகரில் உள்ளது. இதன் பழைய பெயர் திருக்குருகூர். அவர் தமது ஈடுபாட்டைத் தமது திருவாய்மொழியில் பாடியுள்ளார்.

கொற்கை நகர முத்து வணிகத்தைப் பற்றி முத்தொள்ளாயிர ஆசிரியர் அனுபவித்துப் பாடியுள்ளார். சீதக்காதி என்ற பெருவணிகர் காயல்பட்டணத்தைச் சார்ந்தவர். அவர் பல புலவர்களை ஆதரித்தவர். அவர் இறந்தபோது நமச்சிவாயப் புலவர்,

"கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைக்கரத்துச்
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே!" என்று தம் உணர்ச்சியைப் பாடலாக்கினார். அருணகிரிநாதர் தாம் பாடிய திருப்புகழில் ஏரிநீர் நந்தவனங்களில் இருந்ததால் சேல்மீன்கள் துள்ளிக் குதித்து பூஞ்செடிகொடிகளை அழித்தன எனப் பாடியுள்ளார்.

அண்ணாமலையார் கழுகுமலை முருகன் மேல் காவடிச்சிந்தைப் பாடியுள்ளார். சங்கரன் கோவிலில் உள்ள கோமதித் தாயைப் பற்றி அழகிய சொக்கநாதர் பக்தியோடு பாடியுள்ளார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



கரிவலம் வந்த நல்லூர் என்னும் பெயர் கொண்ட ஸ்தலம் கருவை நல்லூர் ஆகும். இத்தலத்தைப் பற்றி திருக்கருவை வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி ஆகிய நூல்களில் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

குற்றால மலையின் இயற்கையைக் கண்ட திருஞான சம்பந்தர் 'நுண் துளி தூங்கும் குற்றாலம்' என்று பாடியுள்ளார். இத்தலத்தைப் பற்றி மாணிக்கவாசகரும் 'உற்றாரை யான்வேண்டேன்' என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். திரிகூடராசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சியில் இம்மலையின் வளத்தைக் குறி சொல்லுகின்ற பெண் கூறுவது போல் பாடியுள்ளார்.

இத்தகு பெருமைமிக்க திருநெல்வேலியைப் பற்றியும் அங்கு வாழ்ந்த புலவர்களின் புலமையையும் நினைவில் கொள்வோம்.

## கற்பவை கற்றபின்

**உங்களுக்குப் பிடித்த கவிதை ஒன்றைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**மாணவன் 1** : இன்று நான் நூலகம் செல்லலாம் என்று புறப்பட்டேன். நல்ல மழை பெய்ததால் செல்லவில்லை.

**மாணவன் 2** : எதற்கு நூலகத்திற்கு செல்ல வேண்டும்?

**மாணவன் 1** : நான் எப்போதும் விடுமுறை என்றால் நூலகத்திற்குச் செல்வேன். எனக்குப் பிடித்த நூல்களைப் படித்து குறிப்பு எழுதிக் கொள்வேன்.

**மாணவன் 2** : அப்படியா! நீ எழுதிய குறிப்பிலிருந்து எதைப் பற்றியாவது எனக்குக் கூறுகிறாயா?

**மாணவன் 1** : தாராளமாகக் கூறுகிறேன். உவமைக் கவிஞர் என்று போற்றப்படும் சுரதாவின் கவிதை நூலில் 'இன்பம்' என்ற தலைப்பில் உள்ள கவிதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

"பழந்தமிழ் கற்றல் இன்பம்
பலநாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்னை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்.
..............................
..............................
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்.

**மாணவன் 2** : பாடல் மிகவும் எளிமையாக இருக்கிறதே.

**மாணவன் 1** : ஆமாம் பாடல் மிகவும் எளிமையானது. பொருள் பொதிந்த பாடல்.

**மாணவன் 2** : பாடலின் பொருளைக் கூறு.

**மாணவன் 1** : இன்பம் தருவன என்று கவிஞர் சிலவற்றைக் கூறுகிறார். பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்பது மகிழ்ச்சி தரும். பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது மனத்திற்கு மகிழ்ச்சி தரும். புதுமைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். கற்றோர் நிறைந்த அவையில் தான் கற்ற கல்வியை எடுத்துரைப்பதும் வாழ்வில் வெற்றி பெறுவதற்கான

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net This is Only for Sample for Full Book Order www.CBSEtips.in
Online or Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு -1

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3 × 1 = 3)

1. மரம் வளர்த்தால் ........................... பெறலாம்.

அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

2. 'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......................... .

அ) தேர் + எடுத்து ஆ) தேர்ந்து + தெடுத்து

இ) தேர்ந்தது + அடுத்து ஈ) தேர்ந்து + எடுத்து

3. இளங்கோவடிகள் ......................... மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.

அ) இமய ஆ) கொல்லி இ) பொதிகை ஈ) விந்திய

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

4. நெற்பயிர் நடுவதற்கான இடைவெளி ............................ .
5. வேணுவனம் என்பதன் பொருள் ........................ .
6. உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவது ................. ஆகும்.

## III. பொருத்துக. (4 × 1/2 = 2)

7. நாற்று – பறித்தல் 8. நீர் – அறுத்தல்

9. கதிர் – நடுதல் 10. களை – பாய்ச்சுதல்

## IV. தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக (1 × 1 = 1)

11. அப்துல் கலாமின் புகழ் .................... உலகெங்கும் பரவியது. (குன்றிமேலிட்ட விளக்கு போல/ குடத்துள் இட்ட விளக்கு போல)

## V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

12. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
13. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?
14. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
15. உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

## VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். (2 × 3 = 6)

16. தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.
17. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
18. மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?
19. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

## VII. அடிமாறாமல் எழுதுக. (4)

20. 'மாரியொன்று' எனத் தொடங்கும் 'விருந்தோம்பல்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com